# தமிழ்நாடு
# மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் ஆணையம்

## கூட்டுறவுச் சங்கங்களின்
## நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்

தேர்தல் அலுலர்களுக்கான
துணைக் கையேடு – 2
(அலுவலர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)

# வாக்காளர் பட்டியல்
# (Members / Voters List)
# 2023

திரு.தயானந்த் கட்டாரியா, இ ஆ ப.,
ஆணையர்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 018.

**உங்களுடன்**

அன்புடையீர்,

தன்னார்வ அமைப்புகளாகவும், (Voluntary Formation), தன்னாட்சி முறையில் (Autonomous Functioning) செயல்படுவதாகவும், மக்களாட்சி வழியிலான (Democratic Control) கட்டுப்பாடு மற்றும் தொழில் முறை மேலாண்மை (Professional Management) ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகவும் கொண்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் (Members of the Board) மற்றும் தலைவர்/துணைத்தலைவர் (Office Bearers) ஆகியோரின் தேர்தல்கள் மிகவும் முக்கியமானதும், சிறப்பானதும், பொறுப்பானதும் ஆகும்.

தமிழ்நாட்டில் தற்போது சுமார் 23,000–க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் நிர்வாகக் குழுக்களுக்கு சுமார் 2 லட்சத்திற்கும் அதிகமான நிர்வாகக்குழு உறுப்பினர்களை (Vacancies) சுமார் 2 கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் (வாக்காளர்கள்) தேர்ந்தெடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான இத்தேர்தல்கள் ஒரு மாபெரும் நிகழ்வாகும்.

இச்சங்கங்களின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் அமைதியாகவும், ஒழுங்காகவும், சட்ட விதிகளுக்குட்பட்டும் (Free, fair, Transparent, Peacefully, Orderly, as per Act Rules and Bylaws) நடத்த வேண்டிய சட்டபூர்வ பொறுப்பும் கடமையும் ஆணையத்திற்குள்ளது.

எனவே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்திடும் பொறுப்பிலுள்ள அனைத்து அலுவலர்களும் இதனை உணர்ந்து தங்களுக்கேற்பட்ட சட்டபூர்வ கடமையினையும், பொறுப்பினையும், சிறப்பாகச் செய்திடுவார்கள் என்று ஆணையம் எதிர்பார்க்கிறது.

இவ்வகையில் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள இதர கையேடுகள், துணைக்கையேடுகள் மற்றும் சுற்றறிக்கை தொகுப்புகளுடன் ஆணையத்தின் இக்கையேடும் மிக்க பயன்தருவதாக அமையும் என்றும் ஆணையம் உறுதியாகக் கருதுகிறது.

வாழ்த்துக்களுடன்,

நாள் : 03.02.2023

(தயானந்த் கட்டாரியா)

## உள்ளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | பொது | 1 |
| 2 | தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையர் | 1 |
| 3 | உறுப்பினர் பட்டியல் மற்றும் வாக்காளர் பட்டியல் | 3 |
| 4 | மத்திய சங்கங்களின் கூடுதல் பட்டியல் | 6 |
| 5 | சரிபார்ப்புப் பட்டியல் | 7 |
| 6 | வாக்காளர் பட்டியல் தொடர்பான புகார்கள் | 8 |
| 7 | இணைப்புகள் (1 முதல் 2 வரை) | 10 - 26 |

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

### கூட்டுறவுச் சங்கங்களின்
### நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்

### தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு - 2
(அலுவலர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)

# வாக்காளர் பட்டியல்

## 1. பொது:

**1.1.** தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவிற்கான தேர்தல்கள் 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (இனிவரும் இடங்களில் கூட்டுறவுச் சட்டம்) மற்றும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் (இனிவரும் இடங்களில் விதிகள்) ஆகியவற்றின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

## 2. தேர்தல் செயலாக்கம்

### 2.1 தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையர்

**2.1.1.** கூட்டுறவுச் சட்டம் பிரிவு 33–A-ன் கீழ், தேர்தல் ஆணையர் ஒருவரை உள்ளடக்கிய தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

**2.1.2.** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் அனைத்திற்குமான வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதும் மற்றும் தேர்தல்கள் நடப்பதைக் கண்காணிப்புச் செய்வதும், அவற்றைக் கட்டுப்பாடு

செய்வதும், இத்தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் உள்ளடங்கியவை ஆகும்.

**2.1.3** மாநிலத் தேர்தல் அலுவலர்கள், (State Election Officers), மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் (District Election Officers), வாக்காளர் பட்டியல் அலுவலர்கள் (Electoral officers), தேர்தல் அலுவலர்கள் (Election officers), வாக்குச்சாவடி அலுவலர்கள் (Polling Officers) மற்றும் பிற தேர்தல் பணிமேற்கொள்ளும் அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் உட்பட அனைவரும் தேர்தல்கள் முடியும்வரை மாநிலத் தேர்தல் ஆணையத்தின் அயற்பணிக்கு அனுப்பப்பட்டவர்களாகக் (on deputation) கருதப்படுவார்கள். (விதி 52–A(5))

**2.2. வாக்காளர் பட்டியல் அலுவலர்கள் (Electoral Officers)**

2.2.1 மாவட்டத் தேர்தல் அலுவலர், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர் பணித்தரத்திற்குக் குறையாத அலுவலர், அல்லது இதே பணித் தரத்திற்குக் குறையாத இதர அரசு துறை அலுவலர்கள் (Officers of the Government) ஆகியோரை தேவையான அளவிற்கு வாக்காளர் பட்டியல் அலுவலராக நியமனம் செய்யலாம்.

**2.2.2** பொதுவில் வாக்காளர் பட்டியல் அலுவலர் அரசு அலுவலராக இருத்தல் வேண்டும்.

**2.2.3.** தேர்தல் நடைபெறும் சங்கங்களின் வாக்காளர் பட்டியல் (Voters List) தயாரிப்பதும், அதனை வெளியிடுவதும் வாக்காளர் பட்டியல் அலுவலரின் பொறுப்பாகும்.

[விதி 52-(1)(c)]

## 3. உறுப்பினர் பட்டியல் மற்றும் வாக்காளர் பட்டியல் (Members list & Voters list):-

**3.1** தேர்தல் செயல்முறைத்திட்டம் கிடைக்கப்பெற்றதும், சங்கம் உடனடியாக சங்கத்தின்வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய **30**வது நாளில் சங்க உறுப்பினர்களாக உள்ள, (on the date thirty days prior to the date of poll) கூட்டுறவுச் சட்டம், விதிகள்படி சங்கத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள, அனைத்து உறுப்பினர்களின் பட்டியலை (Members list) தயாரித்திடவேண்டும். இப்பட்டியல் அப்பகுதியின் வழக்கு மொழியில் (Vernacular) தயாரிக்கப்படவேண்டும். உறுப்பினர் புத்தகத்தில் (admission register) கண்டுள்ள உறுப்பினர் வரிசைப்படி இப்பட்டியல் இருத்தல் வேண்டும்.

(விதி 52 (7) (a) )

**3.2.** உறுப்பினர் பட்டியலில் கீழ்வரும் விவரங்கள் இருத்தல் வேண்டும்

(1) தனிப்பட்ட உறுப்பினராக (individual member) இருப்பின் உறுப்பினர் பெயர், உபபெயர் (surname if any), உறுப்பினர் எண், தகப்பனார் அல்லது கணவரின் பெயர், உறுப்பினர் புத்தகத்தில் பதியப்பட்டபடி கிடைக்கக் கூடிய (as entered and available) உறுப்பினரின் முகவரி, உறுப்பினர் ஏதாகினும் தொகுதியைச் (constituency) சேர்ந்தவராக இருப்பின், அத்தொகுதியின் பெயர்;

(2) இணைக்கப்பெற்ற சங்கமாக இருப்பின், அச்சங்கத்தின் பெயர், பதிவு எண், முகவரி, உறுப்பினர் எண், மற்றும் பிரதிநிதியின் (delegate) பெயர், அப்பிரதிநிதியின் தற்போதைய பதவிக்காலம் முடிவுறும் நாள் (date of expiry of the current term).

(விதி 52 (7) (b))

(3). உறுப்பினர் பட்டியலின் மூன்று நகல்களை குறைந்தபட்சம் வாக்குப்பதிவு நாளுக்கு 15 நாட்களுக்கு முன்னதாகவே வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு அனுப்பிட வேண்டும்.

(விதி 52 (7) (c) )

3.4. வாக்காளர் பட்டியல் அலுவலர், சங்கத்தால் அனுப்பப்பட்ட உறுப்பினர் பட்டியலை (members list) சங்க ஆவணங்களுடன் சரிபார்த்து, வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய 30 நாளில் சங்க உறுப்பினர்களாக உள்ள கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின்படி தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும் (இனிவரும் இடங்களில் வாக்காளர் பட்டியல் (voters list) எனக் கூறப்படும்) வாக்காளர் பட்டியல் வழக்கு மொழியில் (vernacular), சங்க உறுப்பினர் புத்தகத்தில் கண்டுள்ள வரிசையில் உறுப்பினர்கள் பெயர்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

3.5 இந்த வாக்காளர் பட்டியலில் கீழ்வரும் விபரங்கள் இருத்தல் வேண்டும்.

(1) தனிப்பட்ட உறுப்பினராக (individual member) இருப்பின் உறுப்பினர் பெயர், உபபெயர் (surname if any), உறுப்பினர் எண், தகப்பனார் அல்லது கணவரின் பெயர், உறுப்பினர் புத்தகத்தில் பதியப்பட்டபடி கிடைக்கக் கூடிய (as entered and available) உறுப்பினரின் முகவரி மற்றும் உறுப்பினர் ஏதாகினும் தொகுதியைச் (constituency) சேர்ந்தவராக இருப்பின், அத்தொகுதியின் பெயர்;

(2) இணைக்கப்பெற்ற சங்கமாக இருப்பின், அச்சங்கத்தின் பெயர், பதிவு எண், முகவரி, உறுப்பினர் எண், பிரதிநிதியின் (delegate) பெயர், மற்றும் அப்பிரதிநிதியின் தற்போதைய பதவிக்காலம் முடிவுறும் நாள் (date of expiry of the current term).

(விதி 52 (7) (d))

3.6. வாக்காளர் பட்டியல் அலுவலர், வாக்காளர் பட்டியலை சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில், (Notice Board) குறைந்தபட்சம் வாக்குப்பதிவுக்கு 10 தினங்களுக்கு முன்னதாக வெளியிடவேண்டும். இப்பட்டியல் மீது கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் ஏதும் இருப்பின் உறுப்பினர்கள் எக்காரணத்தினால் மற்றும் எதனடிப்படையில் அக்கோரிக்கை எழுப்பப்படுகிறது, அல்லது மறுப்பு தெரிவிக்கப்படுகிறது என்ற விவரங்களைக் கொண்ட ஓர் மனுவினை, பட்டியல் வெளியிடப்பட்ட 2 தினங்களுக்குள் தம்மிடம் அளிக்க வேண்டும் என்றும் வாக்காளர் பட்டியல் அலுவலர் அதில் தெரிவித்திருக்க வேண்டும்.

(விதி 52 (7) (f))

3.7 வாக்காளர் பட்டியல் அலுவலர், தன்னால் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் மீது பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் மீது, தேவை என்று அவரால் கருதப்படும் இனங்களின் மீது, உரிய விசாரணை மேற்கொண்டு அதன் மீது எழுத்து பூர்வமாக முடிவெடுத்து (Shall decide in writing), திருத்தங்கள் தேவை என்று கருதப்படும் இனங்களில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு, திருத்தங்களுடனான பட்டியலை சங்க அலுவலகத்தில் உள்ள தகவல் பலகையில், குறைந்தபட்சம்

வேட்பு மனு தாக்கல் செய்யும் நாளுக்கு இருநாட்களுக்கு முன்னதாக, வெளியிடவேண்டும். உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் மீது முடிவெடுக்க சங்கத்திற்கு சொந்தமான மற்றும் சங்க வசமுள்ள (belong to or custody) கணக்குகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை சரிபார்க்க வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு முழு உரிமையும் (Free access) உண்டு.

(விதி 52 (7) (g))

**3.8.** ஏதேனும் ஓர் சங்கம், நிர்ணயிக்கப்பட்ட நாட்களுக்குள் உறுப்பினர் பட்டியலை வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு அனுப்பத் தவறும் நிலையில், வாக்காளர் பட்டியல் அலுவலர், தானாகவோ அல்லது தன்னால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதாவது நபர் மூலமாகவோ வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அதற்கான செலவினங்களை அச்சங்கமே ஏற்க வேண்டும். இம்மாதிரி நிகழ்வுகளில், வாக்காளர் பட்டியல் அலுவலர் தாமாகவே, சங்க அலுவலகத்தில் உள்ள தகவல் பலகையில், குறைந்தபட்சம் வாக்குப்பதிவு நாளுக்கு 7 நாட்களுக்கு முன்னதாக, வெளியிடவேண்டும். மேலே வரிசை எண் (3)-ல் கூறப்பட்டபடியான கோரிக்கைகள் மற்றும் மறுப்புகளை பட்டியல் வெளியிட்ட ஒரு நாளுக்குள் அளிக்கும்படியும் கோரியிருத்தல் வேண்டும். மேலே (3.7)ல் சொல்லப்பட்டபடியான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை, வாக்காளர் பட்டியல் அலுவலர் குறைந்தபட்சம் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் நாளுக்கு முந்தைய நாளில் வெளியிடவேண்டும்.

(விதி 52 (7) (h) )

**4. மத்திய சங்கங்களின் கூடுதல் பட்டியல்**

**4.1.** ஒரு அங்கத்தினர் கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின்படி தகுதிகள் பெற்றிருப்பதுடன் வாக்காளர் பட்டியலில் அவர் பெயர் சேர்க்கப்பட்டுள்ளவர் மட்டுமே தேர்தலில் வேட்பாளராக இருக்க முடியும்.

**4.2** மைய (Central) மற்றும் தலைமைச் (Apex) சங்கங்களில் தனிநபர் உறுப்பினர்களாக இல்லாத நிலையில், இணைப்புச் சங்கங்கள் மட்டுமே, உறுப்பினர்களாக உள்ள நிலையில், பட்டியல் இனம் (Scheduled Caste) மற்றும் பட்டியல் பழங்குடியினர் (Scheduled Tribes) மற்றும் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்திட சம்பந்தப்பட்ட மத்திய சங்கம் அல்லது தலைமைச் சங்கம் தங்களது இணைப்புச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் உள்ள சட்டம் விதி மற்றும் துணைவிதிப்படி நிர்வாகக்குழு உறுப்பினராக தகுதி பெற்ற பட்டியல் இனம் பட்டியல் பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோரின் பட்டியல் தயாரித்திட வேண்டும். இப்பட்டியலில் உள்ள ஒரு நபர், அவருடைய பெயர் அச்சங்கத்தின் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாவிடினும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யலாம்.

**4.3.** மத்திய சங்கம்/தலைமைச் சங்கத்தில் தயாரிக்கப்படும் விதி எண்.52(7)(a) மற்றும் 52(7) (b)–ல் சொல்லப்பட்ட சங்க வாக்காளர் பட்டியலுடன் இப்பட்டியலும் சங்கத்தால் தரப்பட வேண்டும். ஆயினும் வாக்காளர் பட்டியலுடன் கூடுதலாகத் தரப்படும் இப்பட்டியல் சங்கத்தின் வாக்காளர் பட்டியலாகாது.

## 5. சரிபார்ப்புப் பட்டியல்

வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள ஒருவரே நிர்வாகக்குழு உறுப்பினர் தேர்தலில் வேட்பு மனுத்தாக்கல் செய்ய இயலும் என்ற நிலையில், சங்க வாக்காளர் பட்டியல் மிக முக்கியமானதாகும். எனவே வாக்காளர் பட்டியல் அலுவலர் பணி மிக மிகப் பொறுப்பானதாக உள்ள நிலையில், இது தொடர்பான கூட்டுறவு சட்டம் மற்றும் விதிகளை நன்கறிந்து செயல்படுதல் மிகவும் அவசியமாகும். இவ்வகையில் தனது பணி தொடங்குவதற்குமுன் அது தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியவற்றில் முக்கியமான சில குறிப்புகள் தனியே தரப்பட்டுள்ளன (இணைப்பு – 1).

## 6. வாக்காளர் பட்டியல் தொடர்பான புகார்கள்

**6.1.** கடந்த தேர்தல்களில் சில நேர்வுகளில் வாக்காளர் பட்டியல் நடவடிக்கை தொடர்பாக தேர்தல் ஆணையத்தினால் பல்வேறு புகார்கள் பெறப்பட்டன. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு முன்பாக நீதிப் பேராணை மனுக்களும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதிகளைக் கொண்ட கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்புக் குழுக்கள் முன்பாக மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

**6.2.** வாக்காளர் பட்டியல் வெளியிடுவது தொடர்பாக கூறப்பட்ட புகார்களில் மிக முக்கியமானவை கீழ்வருமாறு :-

1) உறுப்பினர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
2) வாக்காளர் பட்டியல் அலுவலர் வரவில்லை.

3) உறுப்பினர் பட்டியல் சரிவரத் தயாரிக்கப்படவில்லை.

4) போலியான மற்றும் தகுதியற்ற உறுப்பினர்கள், உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

5) கோருரிமை மற்றும் மறுப்புகள் பெறப்படவில்லை. அவற்றின் மீது சரியான முடிவெடுக்கவில்லை.

6) இறுதி வாக்காளர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.

7) உறுப்பினர் பட்டியலில் பெயர் விடுதல்.

8) இறந்த உறுப்பினர்கள் பெயர்கள் நீக்கப்படவில்லை.

9) சங்க செயள எல்லை (area of operation)-யில் வசிக்காத/தொழில் செய்யாத/விவசாய நிலம் இல்லாத உறுப்பினர்கள் சங்கத்துணை விதிக்கு புறம்பாக உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

**6.3.** வாக்காளர் பட்டியல் தயாரிப்பது பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் தேர்தல் ஆணையம் சுற்றறிக்கைகள் வாயிலாக அறிவுரைகள் வழங்கியுள்ளது. **(இணைப்பு–2)** வாக்காளர் பட்டியல் அலுவலர்கள் அதனைப் படித்து அறிந்து கொள்வது அவசியமாகும்.

**6.4.** எனவே எவ்விதப் புகார்களுக்கும் இடம் தராது ஒரு சுதந்திரமான, நியாயமான சட்ட விதிகள்படியான தேர்தல் நடத்த வேண்டியது ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான அலுவலர்களின் சட்டபூர்வ கடமையாகும் என ஆணையம் தெரிவிக்க விரும்புகிறது.

**இணைப்பு –1**

**(பத்தி 5)**

## CHECK LIST FOR ELECTORAL OFFICERS

**(Not exhaustive but only illustrative )**

**AS ELECTORAL OFFICER :**

1. Have you received 3 copies of the members list eligible to vote duly prepared by the society atleast ten clear days prior to the date of poll?
2. Have you verified and satisfied that the members list has been published by the society on the notice board at the office of the society at least 10 clear days prior to the date of poll?
3. If the society has failed to prepare the members list, have you prepared the voters list and published the same atleast 7 clear days before the date of poll?
4. Have you received any claim or objection to the voters' list published from any member, within the date specified in the election notice?
5. Have you considered the claims and objections raised and made necessary corrections to the voters list, if any?
6. Have you verified and satisfied that the corrections made by you have been published in the notice board of the society on or before the date specified in the election notice?

**இணைப்பு –2**
**(பத்தி 6.3)**

**To**
**The State Election Officers.**

**Rc.No.329/2013/CE.5** **Dated:19.03.2013**

Sir,

Sub : Election – Conduct of Elections of the Members to the Boards and Office Bearers of Cooperative Societies, in the State - Preparation of voters list and publications by Electoral Officer – Regarding.

Representations and petitions are being received from the members of Cooperatives and general public either directly from them or through their advocates.

In majority of such cases, the contents -interalia- relate to the procedure followed in the matter and manner of admission and removal of members and which comes under the purview of the statutory function assigned to the Electoral Officer, such as

preparing, receiving objections, correcting and finally publishing the corrected voters list.

As the voters list is the most important and vital document, on the basis of which the entire election process is builtup, the Electoral Officers should be properly equipped,guided and suitably instructed to handle such situations, to execute the statutory functions assigned to them effectively, efficiently and strictly according to the provisions of the act and rules without any commission, omission, fear or favour.

Relevant extract of the provision relating to the publication of voters list enclosed for ready reference.

The State Election Officers are therefore requested to act immediately, to bring home these points to the Electoral Officers, taking in to consideration the fast approaching dates fixed for this process.

The action taken should be informed to Election Commission Urgently.

**(Sd../-) M.R.Mohan**
**Commissioner**

Copy to:

The Secretary to Government,
Cooperation, Food and Consumer
Protection Department,
Secretariat, Chennai–9.

**TAMIL NADU STATE CO-OPERATIVE SOCIETEIS ELECTION COMMISSION**

Extract of Rule 52(7) and (7)(a) of the
TNCS Rules, 1988, relating to voters list
(Vide Commissioner's letter
Rc.329/2013/CE5/Date19.03.2013)

(7)(a) On receipt of the election programme, the society shall immediately prepare a list of members who, on the date thirty days prior to the date of poll, were qualified in accordance with the provisions of the Act and Rules to vote at the election. If different constituencies are provided in the rules or by-laws, such member's list shall be prepared constituency wise. The list shall be prepared in vernacular. The names ofthe members in each part of the member's list shall be arranged according to member's admission numbers as entered in the admission book.

(b) The member's list shall contain.-

(i) in the case of an individual member, the name, the surname (if any), the admission number,father's or husband's name and address of the members as entered and available in the admission

register and the name of the constituency, if any, to which he belongs; and

(ii) In the case of an affiliated society, the name of the society, its registration number, address and admission number, together with the name of the delegate and the date of expiry of the current term of the delegate.

(c) The society shall send three copies of the member's list to the Electoral Officer at least fifteen clear day sprior to the date of poll.

(d) The Electoral Office shall verify the member's list sent by the society with reference to the available records and prepare a list of members who on the date thirty days prior to the date of poll were qualified in accordance with the provisions of the Act and Rules to vote at election (herein after called the voters'list). The voters' list shall be prepared in vernacular. The names of the members in each part of the voters' list shall be arranged according to member's admission number as entered in the admission book.

(e) The voters' list shall contain-

(i) In the case of an individual member, the name, the surname (if any) the admission number, father's or husband's name and address of the member as entered and available in the admission register and the name of the constituency (if any), to which he belong; and

(ii) in the case of an affiliated society, the name of the society, its registration number, address and admission number, together with the name of the delegate and the date of expiry of the current term of the delegate.

(f) The Electoral Officer shall publish the voters list on the notice board at the office of the society not less than ten cleardays prior to the date of poll requiring the members to make their claims or raise their objections, ifany, by a petition setting out the grounds on which the claim is based or the objection is raised, as the case maybe, and present if to the Electoral Officer within two days of such publication.

(g) The Electoral Officer shall decide in writing the claims made or objections raised, if any, to the voters' list, after making such enquiry as he considers necessary and make such corrections as may be deemed necessary and shall publish in the notice board at the office of the society or at such other places as he may consider necessary such corrections atleast two days prior to the date fixed for filing of nomination. For the purpose of deciding the claimsor objection, the Electoral Officers hall have free access to verify the accounts, books, records and documents belonging to or in the custody of the society.

(h) If any society fails to prepare and send the member's list within the time specified in clause (c), the Electoral Officer shall himselfor through any person, authorised by him in this behalf, prepare the voters' list and the society shall pay the expenses therefore. In such cases, the Electoral Officer shall also publish the voters list in the notice board at the office of the society atleast seven clear days prior to the date of poll requiring the members to make their claims or raise their objections, if any, by a petition setting out the

grounds on which the claim is based or the objection is raised, as the case may be, presented to the Electoral Officer within one day of such publication. The provisionsin clause(g) shall apply with the modification that the correction so made shall be published in the notice board at the office of the society or at such other place as he may specify, atleast on the date prior to the date fixed for filling of nomination.

(7-A) Notwithstanding anything contained in the Rules or the by-laws, in the case a central society or an apex society where there is only society member and no individual member, for the election of members of the board to fill up the seats reserved for Scheduled Castes and Scheduled Tribes or Women, **the central society or the apex society concerned shall prepare a list of members of the boards of societies affiliated to it and belonging to Scheduled Castes and Scheduled Tribes of Women respectively and who were qualified in accordance with the provisions of the act and the Rules for being elected as a member of the board of such central or apex society, as the case may be, and send three copies of such lists to the Election Officer concerned at least ten days prior to the date of poll.**

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்**

**அனுப்புநர்**

திரு.தயானந்த் கட்டாரியா,
இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**

1) கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளர்,
2) அனைத்துசெயற்பதிவாளர்கள்

**ந.க.825/2022/கூதே.2(3)** **நாள் : 29.08.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :**

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – எதிர்வரும் ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 (Enmasse Election-2023) – ஆரம்பகட்ட நடவடிக்கைகள் – **உறுப்பினர் பட்டியல் சரிசெய்தல் (Purification of Electoral Rolls)** - தொடர்பாக..

பார்வை :

1) ஆணையக்கடிதம் ந.க825/2022/கூதே.2(1) நாள்:
2) ஆணையக்கடிதம் ந.க.327/2013/கூதே.5 நாள்:19.03.2013
3) ஆணையக்கடிதம் ந.க.328/2013/கூதே.5 நாள்:19.03.2013
4) ஆணையக்கடிதம் ந.க.329/2013/கூதே.5நாள்:19.03.2013, 10.06.2014,21.04.2015
5) ஆணையக்கடிதம் ந.க.931/2013/கூதே.5 நாள்:14.08.2014
6) ஆணையக்கடிதம் ந.க.1698/2014/கூதே.5 நாள்:25.09.2014
7) ஆணையக்கடிதம் ந.க.807/2013/கூதே.5 நாள்:16.06.2016
8) ஆணையக்கடிதம் ந.க.1062/2021/கூதே.5 நாள்:01.10.2021
9) ஆணையக்கடிதம் ந.க.1063/2021/கூதே.5 நாள்:01.10.2021

1) பார்வை(1)-ல் கண்ட கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஒட்டுமொத்த தேர்தல் 2023-ல் தொடங்க இருப்பதையும் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) இவ்வகையில் தேர்தல் முன்னேற்பாடுகளில் மிகமிகமுக்கியமானது சங்க உறுப்பினர் பட்டியல் சரியான முறையில் சங்கத்தால் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதாகும்.

3) 1988-ம் ஆண்டு தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் (இனிச்சட்டம்) பிரிவு 33-A-ன் கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் (இனி ஆணையம்) பிரிவு 33 (11)(b).ன் படி மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் படைத்தாகும்.

4) ஆணையம் கூட்டுறவு சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும் ,நியாயமாகவும், வெளிப்படைத்-தன்மையுடனும் சட்ட விதிகளுக் -குட்பட்டும் (Free, Fair., Transparent, as per Act and Rules) நடத்த வேண்டியது சட்டபூர்வ கட்டளையாகும்.

5) தவிரவும் பிரிவு 33 (11)(b).ல் குறிப்பிட்டுள்ளவாறு வாக்காளர் பட்டியல்கள் தயார் செய்தல் (Preparation of the Electoral Rolls) அவற்றுள் மிக முக்கிமானதாகும்.

6) மேலும் 1988-ம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவு சங்க விதிகள் (இனி விதி) விதி எண் 52-A (3) மற்றும் 52-A (4) -ன் படி ஆணையத்தால் நியமிக்கப்படும் துறைத் தலைவர்களாக உள்ள மாநிலத் தேர்தல் அலுவலர்கள் (State Election Officers) மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் ஆகியோர், சங்கங்களின் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், (Preparation and publication) ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்திட (Coordination and Supervision) வேண்டும் என்றம் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

7) இவ்வகையில் வாக்காளர் பட்டியல் தேர்தல் நடத்துவதற்கான மிக முக்கியமான அடிப்படை ஆதார ஆவணமாக உள்ளதென்பதையும் எனவே தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மிக முக்கியமான பணியாகும், என்பதையும் மீண்டும் ஆணையம் வலியுறுத்த விரும்புகிறது.

8) **முந்தைய தேர்தல்களில் சங்க வாக்காளர் பட்டியல் சரிவரத் தயாரிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக சங்க தேர்தல் நடவடிக்கைகள் ரத்து**

**செய்தும் சங்க வாக்காளர் பட்டியல்கள் சரிசெய்யப்பட வேண்டிய** (Purification of the Electoral Rolls) **அவசியத்தை வலியுறுத்தியும் பல வழக்குகளில் மாண்பமை நீதிமன்றங்கள் தீர்ப்புரை வழங்கி உள்ளன.**

9) வாக்காளர் பட்டியல் சரிவரத் தயாரிக்கப்படவில்லை என்று கூறப்படுவதற்கான **காரணங்களில் மிகமுக்கியமானது இறந்த உறுப்பினர்கள் பெயர்கள் நீக்கப்படாததும், சங்கத்தின் துணை விதிகளில் கூறப்பட்ட தகுதி இல்லாதவர்கள் உறுப்பினர்களாக உள்ளதும், சட்டவிதிகளில் கூறப்பட்டபடி உறுப்பினர் சேர்க்கை தொடர்பான ஆவணங்கள் இல்லாததும் / சரிவர இல்லாததும் ஆகும்.**

10) சங்கத் தேர்தல்களில் சங்க உறுப்பினர் பட்டியல்களின் முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே பார்வை (2) முதல் (9) வரை காணும் ஆணைய கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை ஆணையம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது. எனவே வாக்காளர் பட்டியலுக்கு அடிப்படையான உறுப்பினர் பட்டியல் மாண்பமை நீதிமன்ற ஆணைகளில் குறிப்பிட்டபடி சரியான முறையில் இருத்தலையும் (Purification of Electoral Rolls) ஒவ்வொரு சங்கமும் தனது உறுப்பினர் பட்டியல், மற்றும் அது தொடர்பான

விண்ணப்ப படிவங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் (Registers and Records), எத்தேதியிலும் (On any date) ஒழுங்காக பராமரித்தலையும் அதற்கு பொறுப்பான அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டியது மிக அவசர அவசியமானது என்று ஆணையம் கருதுகிறது.

11) உறுப்பினர் பட்டியலில் உள்ள இறந்த உறுப்பினர்கள் மற்றும் துணைவிதிப்படி தகுதியற்ற உறுப்பினர்களைக் கண்டறிந்து நீக்கும் பணிக்கு கால அவகாசம் தேவைப்படும் நிலையில் 2023 ஒட்டு மொத்தத் தேர்தல் அட்டவணை அறிவிக்கப்படும் வரை காத்திராமல் உடனடியாக அதற்கான பணியினை தொடங்குதல் அவசியமானதாகும் என்றும் ஆணையம் கருதுகிறது.

12) அவ்வகையில் தங்கள் கட்டுப்பாட்டில் கீழ்வரும் அனைத்து சங்கங்களுக்கான உறுப்பினர் பட்டியல் 31.08.2022 தேதி வரை சங்கத் துணை விதிகளின் படி சரி செய்யப்பட்டுள்ளன, என்பதை உறுதி செய்திடவும், அவ்வாறு சரிசெய்யப்பட்டுள்ளன என்பதற்கான நிறைவு அறிக்கையினை (Completion Report) அதற்கு பொறுப்பான அலுவலர்களிடமிருந்து பெற்று ஒட்டு மொத்த அறிக்கையினை (Consolidated

Report) 30.09.2022 ஆணையத்திற்கு அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

13) இப்பணி சட்டபூர்வமான பணி என்பதினாலும், விரைவில் 2023 ஒட்டுமொத்த தேர்தல்களை எதிர்நோக்குவதாலும் அவை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் வழக்குகளுக்கும் உட்படும் வாய்ப்புகள் இருப்பதினாலும், இப்பணிகளை முடித்திட அறிவுறுத்திடவும், தவறும் அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், தங்களால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரத்தினை 15.09.2022க்கு ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

**Encl** : Extract of the Provisions as referred to in the letter.,

**நகல்** : இருப்புக் கோப்பு

## ANNEXURE

## PROVISIONS UNDER THE TNCS ACT, 1983 AND TNCS RULES 1988 AS REFERRED TO IN THE LETTER 825/2022/CE2 (3) DATE 29.08.2022

Sec. 33 (11) (b):

The superintendence, direction and control of the preparation of the electoral rolls for, and conduct of, all election to a cooperative society shall vest in the Tamil Nadu State Cooperative Societies Election Commission constituted under section 33-A

Rule 52 A (3)

The Election Commission may appoint the officers appointed as the Registrars of Cooperative Societies by the Government under section 3 of the Act as the State Election Officers in respect of the Cooperative Societies under their respective administrative control. Subject to the superintendence, direction and control of the Election Commission, the State Election Officer, shall coordinate and supervise the preparation and publication of voters list and

also the conduct of elections of members of the boards and the office bearers of the boards of societies under their respective administrative control. They shall also perform such other functions as may be entrusted to him by the Election Commission from time to time.

Rule 52 A (4)

The Election Commission may appoint the officers of the Government not below the rank of a Deputy Registrar of Co-operative Societies in the Co-operative Department of the Government or not below such rank in other departments of the Government as the District Election Officers Subject to the superintendence, direction and control of the Election Commission, the District Election Officers shall co-ordinate and supervise the preparation and publication of Electoral rolls and the conduct of elections members of the boards and office bearers of the boards of societies under their respective administrative control as specified by the Election Commission. They shall also perform such other functions as may be entrusted to them by the Election Commission from time to time.